உ

திருவருள் துணை

மேலைக்கரம்பன்

# முருகமூர்த்தி
# தோத்திரக் காரிகை



ஷியூர்

**திரு. குல. சபாநாதன் அவர்கள்**

வேண்டுகோளின்படி

அல்வாயூர் : கவிஞன்

திரு. மு. செல்லையா அவர்கள்

இயற்றியது

**1965**

[illegible]

11-12-65

உ

திருவருள் துணை

மேலைக்கரம்பன்

# முருகமூர்த்தி
# தோத்திரக் காரிகை



ஷையூர்

திரு. குல. சபாநாதன் அவர்கள்

வேண்டுகோளின்படி

அல்வாயூர் : கவிஞன்

திரு. மு. செல்லையா அவர்கள்

இயற்றியது

1965

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்—இ331-12/65

உ

திருவருள் துணை

# முன்னுரை

உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

ஊர்காவற்றுறைப் பகுதியைச் சார்ந்த மேலைக்கரம்பனிற் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆறுமுக வேலவர் மீது நம் நாட்டிலுள்ள சிறந்த புலவர்களைக்கொண்டு தோத்திரப் பாடல்கள் பாடுவித்து வெளியிடவேண்டுமென்ற வேணவா எமக்கு நெடுங்காலமாக இருந்து வருகிறது. முருகன் அருள் பெற்றுத் திகழ்ந்த நவாலியூர், திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்கள் அடியேனது வேண்டுகோட் கிணங்கிப் பாடித்தந்த ஊஞ்சற் பதிகத்தை 1941ஆம் ஆண்டில் வெளியிடலானேன். சண்முகநாதன்மீது திருவிரட்டைமணிமாலைப் பிரபந்தம் ஒன்று பாடித்தந்துதவும்படி தமிழ்நாட்டிற் றலைசிறந்த புலவர் திலகமாகவும், இறைபணியிலீடுபட்ட இணையிலாப் பத்திமானாகவும் விளங்கிய புன்னாலைக்கட்டுவன், வித்துவசிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களை வேண்டினேன். தம் பழுத்த அறிவுகொண்டு இலக்கண இலக்கியத் துறைகளைத் துருவித் துருவி யாராய்ந்து அரும் பெரும் நூல்களை வெளியிடுவதில் ஈடுபட்டு ஓயாதுழைத்த வித்துவசிரோமணி அவர்கள் பாடியீந்த கரம்பைநகர் சண்முகநாதன் திருவிரட்டைமணிமாலையினை இவ்வாலயத்தில் ஆறுமுக சுவாமி உற்சவ மூர்த்தியின் பிரதிட்டைக் கும்பாபிஷேகத் தினத்தன்று 1954ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23ஆந் திகதி (5-5-54) புதன்கிழமை வெளியிடலானேன்.

கொழும்பு அரசினர் ஆசிரிய கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராயும், வித்தியா நிலையத்தில் தலைமைத் தமிழ் மொழி பெயர்ப்பாளராயும் கடமையாற்றி இளைப்பாறியவரும், தமிழிற் சிறந்த பாண்டித்தியம் வாய்ந்தவரும், முன்னாள் 'வித்தக'ப் பத்திராதிபருமாகிய தென்கோவை. உயர்திரு. ச. கந்தையா பிள்ளையவர்களை மேலைக்கரம்பன், சண்முகநாதன்மீது தோத்திர மஞ்சரி பாடித் தருமாறு வேண்டினேன். பழுத்த தமிழ் அறிவும், சைவ சித்தாந்த அறிவும் வாய்ந்த பண்டிதர் அவர்கள் பாடியீந்த துவாதச தோத்திர மஞ்சரியினை 5-12-57இல் வெளியிடலானேன்.

ஈழநாட்டிலே தமிழ் வளர்த்த புரவலர் அமரர் திரு. நா. பொன்னையா அவர்கள் 'ஈழகேசரி' எனும் உயர்தர வாரப் பத்திரிகையினைச் செவ்வனே நடாத்தி, புலவர் சிலரையும் எழுத்தாளர் சிலரையும் உருவாக்கியதைத் தமிழ்கூறு நல் லுலகம் நன்கறியும். அத்தகைய புலவர் குழாமில் ஒருவரும், 'அநுசுயா' எனும் புனைபெயருடன் சிந்தனைச் சுடரைத் தூண் டும் நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதிய சிறந்த எழுத்தாள ரும், என் நண்பருமாகிய கவிஞர் மு. செல்லையா அவர்கள் சிறந்த முருக பக்தர். ஆகவே யான் கேட்டுக்கொண்டதற் கிணங்க கவிஞர் அவர்கள் பக்திச்சுவை ததும்பும் பாமாலை யைத் தொடுத்துள்ளார்.

கவிஞர் செல்லையா அவர்கள் எழுதிய பின்னுரை அற் புதத்லையாற் பிணிப்புண்டு எழுதப்பெற்றதாதலின், அதனை நீக்கிவிடக் கருதினேன். எனினும், பக்திச்சுவை நனி சொட் டப் பாடிய இத் தோத்திரப்பாமாலையினை இயற்ற நேர்ந்த சந்தர்ப்பத்தினைத் தமக்கேயுரிய தனிப்பாங்கில் விளக்கியிருத் தலினாலும் கவிஞர் அவர்களின் வற்புறுத்தலினாலும் அதில் கைவைக்காது வாளாவிடலானேன்.

மேலைக்கரம்பன் கோயிலில் புராணபடனம் செய்வதில் ஈடுபட்டவரும், சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவி யாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசை யால் உந்தப்பெற்று சண்முகநாத வித்தியாசாலையைத் தாபித்து அதன் ஆசிரியர்களின் வேதனத்தை வீடுதோறுஞ் சென்று பிடியரிசி தண்டிச் சேர்க்கும் பொருள் கொடுத்துச் சமாளித் துப் பெரும்பணியாற்றியவருமான திருப்பெருந் திரு. மகாதேவ அடிகளார் (ஸ்ரீ தம்பையாச் சுவாமிகள்) ஞாபகார்த்தமாகத் திருக்கார்த்திகைத் தினத்தன்று இந்நூல் வெளியிடத் திருவருள் பாலிக்கப்பெற்றுள்ளது.

எந்தா யுமெனக் கருள்தந் தையும்நீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே

இங்ஙனம்

**குல. சபாநாதன்**

மேலைக்கரம்பன்,
ஊர்காவற்றுறை,
7–12–65.

## மேலைக்கரம்பன்

# முருகமூர்த்தி தோத்திரக் காரிகை

### விநாயகர் காப்பு : வெண்பா

ஆறு முகங்காட்டி அஞ்சு முகமோட்டிப்
பேறு தருகரம்பன் பெம்மானைக் — கூறுசிறு
பாடலுக்கிங் கானைமுகன் பங்கயத்தாள் நெஞ்சிடைமுன்
நாடவரு ளீயும் நனி.

### கட்டளைக்கலித்துறை

1. செந்தா மரைவளர் செய்யவ
ளென்றுஞ் சிறந்தமரும்
நந்தா வளங்கொள் கரம்பன்
பதியினை நண்ணிஎண்ணி
எந்தாய் சரணஞ் சரணமென்
றோதி இரங்கிநின்றாற்
சிந்தா குலந்தவிர்ந் தின்புறு
வாயங்குச் செல்மனமே.

(செய்யவள் — இலக்குமி)

2. பாட்டிற் குவந்தரு ளீவான்
முருக னெனப்பகர்தல்
கேட்டுக் கவிசில செய்துவந்
தேன்பண்டு கீரனவன்
பாட்டிற் குவந்த திருச்செவி
என்புன்மைப் பாடலிது
கேட்டு நகைத்திடுங் கொல்லோ
கரம்பன்கிர் பாகரனே.

3. இம்மைப் பொருளும் மறுமைக்
கருளு மினிதுதவும்
செம்மைக் கரம்பன் திருப்பதி
யென்று தெரிந்துவந்தேன்
மும்மைக் கொடுமலம் வாட்டி
அலைக்கும் முனைப்பழித்து
வெம்மைப் பிறவித் துயர்களை
வாய்வடி வேலவனே.

4. மின்னே ரிடையை நடையை
மொழியை விழியைநச்சிப்
பொன்னே யனைய பொழுதினைப்
போக்கிய புல்லியன்யான்
கன்னே ருளத்தைக் கரைக்கும்
கரம்பன் கடவுள்தளி
முன்னே விழுந்து தொழுதாற்
கவலை முடிந்திடுமே.
(கன்னேர் — கல்+நேர்; நச்சி — விரும்பி)

5. கடிந்திடு யானென தென்னுஞ்
செருக்கிவை கண்மறைப்பப்
படிந்திடு துன்பப் பரவையி
னீங்கும் பரிசறியேன்
ஒடிந்திடு முள்ளத்திற் கூன்று
துணையா யுறுவினைகள்
தடிந்திட நீவரு வாயே
கரம்பைகொள் சண்முகனே.
(பரவை — கடல்; பரிசு — தன்மை)

6. சிந்தா குலமெனுந் தீயிற்
கருகியுன் சேவடியாஞ்
செந்தா மரைக்குளிர் தேடிவந்
தேன்கரம் பன்திருவே !
கந்தா ! முருகா ! குழகா !
அழகா ! கருணைஉமை
மைந்தா ! மயிலா ! அயிலா !
கடைக்கண் வழங்குதியே.

(அயில் - வேல்)

7. மையா ரருட்கண் ணிருமாதர்
சூழ வளமருவுஞ்
செய்யார் கரம்பன் பதிசேர்
முருகன் திருத்தளியை
மெய்யால் வலம்வந்து நாவாற்
றொழுது விழிகசிந்தே
உய்யா திருந்தனை நெஞ்சே
உனக்கென் னுறுபயனே.

(செய் — வயல் ; தளி — கோவில்)

8. பச்சைக் கடலன்ன மாமயின்
மீது பருதியெனச்
செச்சைக் குமர னமருங்
கரம்பன் திருப்பதியை
நச்சித் தொழுதுகண் ணீர்பெருக்
காதவிந் நாய்ப்பிறவி
எச்சிற் கலைந்திடில் மானுட
வாழ்வினி லென்பயனே.

(பருதி — சூரியன்; செச்சை — செம்மை)

9. நாவல னுஞ்சைவக் காவலன்
கீர்த்தியி னன்குயர்ந்து
தேவ ருலகிற் கரம்பன்
புகழ்சொலுந் தெங்கினங்கள்
ஆவல் பெருக இளநீர்
முருகனுக் காட்டுவித்தால்
மேவ்ரு மானுடர்க் காம்பணி
எங்ஙன் விளம்புவதே.

(கீர்த்தியின் – புகழ்போல்)

10. போற்றிடு கார்த்திகை நாளின்
முருகனைப் புந்திவைத்து
நோற்ற பயனு லுயர்மகப்
பேறும் நுகர்பொருளும்
ஏற்ற பிறவும், அடைந்தா
ருளரென எண்ணிஎண்ணி
வேற்பெரு மானைக் கரம்பனில்
வாழ்த்து வினைஅறுமே.

11. புத்திரப் பேறுறு செம்மனச்
செல்வி எனப்பொலியும்
உத்தம மூதாட்டி செய்வித்த
ஆறு முகனுருவை
எத்தனை யாமுறை நோக்கினு
மானந்த மெய்திஉயர்
பத்தியிற் பூரிக்க லாமே
கரம்பன் பதியடையே.

12. விழிக்கும் மொழிக்கும் பழிக்கும்
வழிக்கும் விளங்குதுணை
அளிக்கும் முருகன் திருவரு
ளென்றே அருணகிரி
களிக்கும் படிசொன்ன வாசக
மெண்ணிக் கதிர்மணிகள்
கொழிக்கும் கரம்பன் பதிதாழ்ந்து
வேலென்று கூவுதியே.

13. செய்யமர் சாலிக் குலம்பெரி
யோரிற் சிரம்வளைத்து
வையமர் வேலற்கு நெல்லீயுந்
தொண்டு வளர்கரம்பன்!
கையமர் நெல்லி எனவிளங்
காநிற்றல் கண்டிருந்தும்
உய்தி யடைய வணங்காத
மாந்தர்க்கென் னேதுவதே.

(செய் - வயல்; சாலிக்குலம்—நெற்பயிர்த்தொகுதி;
பெரியோரிற் — பெரியோர்போல; வை — கூர்மை.)

14. கட்டிக் கரும்புறு மாலைத்
துயரெனக் காசினியில்
மட்டற்ற துன்பத்தில் மூழ்கிக்
கரம்பனை வந்தடைந்தேன்
குட்டிச் சிறையிட்ட வேதன்
வரைந்த கொடுமெழுத்தை
வெட்டித் திருத்திட வல்லவர்
நீயன்றி வேறெவரே.

15. வானத் துயர்தெய்வ யானையை
மன்றல் மருவியநீ
கானக் குறவள்ளி மானையுங்
கொண்டது காட்டுவதென்
மோனத் தவர்க்கரு ளீயுந்
திருவடி மூட்டனெனும்
ஈனத் தவற்கு முரித்தென்ப
தாங்கரம் பன்இறையே.

16. மேலைக் கரம்பன் பதிமுரு
கேசனை மெல்லியலார்
வாலைப் பருவத் திருவன்னை
மாரை வடிமருவும்
வேலை மயிலைக் கொடியாகுங்
கோழியை வேண்டிஎன்றும்
காலையும் மாலையுஞ் சிந்திப்
பவர்க்கில்லை காண்துயரே.

(வடி — கூர்மை)

17. வேலனை யுங்கரம் பன்மலை
வோட்டி விளங்குதண்டைக்
காலனை யும்வர மீவது
மெய்யென்று கற்றுணர்ந்தோர்
சேலனை யும்வயல் சூழும்
பதியாந் திருக்கரம்பன்
பாலனை வார்தொழு வாரழு
வாரன்புப் பாங்கினிலே.

(சேல் — கயல்மீன்)

18. ஆறு முகத்திற் குறுநகை
கண்ணி லருங்கருணை
ஏறு கழுத்திற் கடம்பு
திருக்கர மெய்திடுவேல்
மாறு கெடுக்கு மபயம்
வழங்கும் வரதகரம்
நாறு திருவுருக் காண்பாய்
கரம்பனை நாடுநெஞ்சே.
(நாறுதல் — விளங்குதல்)

19. வாக்கி லொலிக்கின்ற தோத்திரம்
நாலினை யும்மடக்கித்
தாக்கும் மனக்கல்லை நன்கு
நெகிழ்வித்துன் தாளிணையை
நோக்கி விழிநீர் பெருக்கித்
தொழுதிட நுண்ணறிவை
ஆக்குஞ் செயலு முனதே
கரம்ப னறுமுகனே.
(நாலு — மனம், புத்தி, சித்தம், அகங்காரம்)

20. ஒன்ருகி வேரு யுடனுகி
நிற்கு மொருபொருணீ
என்றே அறியகில் லேனுக்கு
முன்னரு ளெட்டுவதோ
இன்றே கரம்பன் பதியினை
ஏத்து மினிமைகண்டேன்
நன்றே புரிவது நின்கட
னும்அருள் நாயகனே.

திருச்சிற்றம்பலம்

கரம்பன் முருகமூர்த்தி கருணை மலர்த்தாள் வாழ்க.

# பின்னுரை

'சங்கச் சான்ருேர் நூல்களாகிய திருமுருகாற்றுப்படையும், பரிபாடலும், பிறவும் முருகப்பெருமானின் அருட்பிரவாகத்தை நன்கு விளக்கிச் செல்கின்றன. பிற்காலத்திலே தோன்றிய அருணகிரியாரும், கச்சியப்பரும் அந்த அருட்பிரவாகத்தை வற்ருத ஜீவநதியாக ஓடச்செய்து, செந்தமிழ் முருகனின் சீர்த்தியை எங்கும் பரப்பியருளினர். இக்காலத்திலே, வாெனொலியும், இசைத் தட்டுக்களும் கந்தப்பெருமான்மீது சிந்தனையைத் தூண்டும் பத்திப் பாடல்களை, மூலைமுடுக்கு எங்கணும் முழக்கி நிற்கின்றன! இவற்ருல், முருகவணக்கம் முதலிடம் பெற்று வளர்ந்து வருவதை இன்று நாம் அனுபவத்தில் அறியலாகும். எமது ஈழநாட்டிலே, கதிர்காமம், செல்வச்சந்நிதி முதலிய அறுமுகப்பெருமானின் ஆலயங்கள், சிறப்புற்றுத் திகழ்கின்றன. இவற்றுள்ளே, கரம்பன் முருகமூர்த்தி கோவிலு மொன்ருகும். இஃது ஊர்காவற்றுறைக்குத் தெற்கே ஒன்றரைமைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு எழுந்தருளி இருக்கும் இறைவனையே தமது குலதெய்வமாகக் கொண்டு வணங்கிவரும் முன்னாள் இலங்கை அரசாங்கத் தலைமைத் தமிழ் மொழிபெயர்ப்பாளரும், 'வித்தியாபோதினி'ப் பத்திராசிரியரும், பேச்சு மொழிபெயர்ப்பாளரும், மாலைதீவுக் கப்பம் வந்து சேரும் போது தேசாதிபதியின் மொழிப்பெயர்ப்பாளராகக் கடமையாற்றி வந்தவரும், இப்போது வாெனொலித் தகவற்பகுதியின் 'ஸ்ரீலங்கா' எனும் மாத சஞ்சிகையினதும் வாரப் பத்திரிகையினதும் பத்திராசிரியருமான **முதலியார் திரு. குல. சபாநாதன்** அவர்களுடன், எனக்கு

35 வருட காலமாக அன்புப் பிணிப்பு உண்டு. இவர் ஒரு தினம், கொழும்பு நகரிலே தமது 'முருகன் அருள்' எனப்படும் வெள்ளவத்தை இராமகிருஷ்ண ரெறேஸிலுள்ள இல்லத்தில் என்னைக் கண்டு, கரம்பன் முருகமூர்த்தி மீது சில தோத்திரப் பாடல்கள் யாத்துத் தரும்படி கூறினார். நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர், வித்துவ சிரோமணி கணேசையர், வித்தகச்சித்தர் தென்கோவை பண்டிதர் ச. கந்தையபிள்ளை என்னுஞ் செந்நாப்புலவர்கள் முன்னமே இக் கோவிலின்மீது பத்திச் சுவை சொட்டப் பாடிய கவிதைகள் பல உள்ளன என்பதை அறிந்தேனாதலினால், பாடுவதற்குத் தயங்கினேன்; ஆயினும், "மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால் — வைதாரையும் அங்கு வாழ வைப்போன்" என்று ஒருவாறு தேறி உடன்பட்டேன்.

சம்பந்தர், சுந்தரர் என்னும் பேரருட் குரவர்கள் தமது கண்ணாற் காணமலே திருக்கேதீச்சரம். கோணேஸ்வரம் என்னுந் தலங்களைப் பாடி அவற்றின் இயற்கைச் சூழலையும், திருவருட்பொலிவையும் முழுவதும் அருளிச் செய்தனர்!

நாயிற் கடையாய்க் கிடக்கும் நான், இக் கோவிலைப் பார்த்து வணங்கிய பின்புதான் பாட முடியும் என எண்ணி இங்குச் செல்லும் பிரயாணக் குறிப்பினை இப் பெரியாரிடம் கேட்டறிந்துகொண்டேன்.

ஒரு வெள்ளிக்கிழமை அதிகாலையிலே, ஸ்நான முதலியவற்றை முடித்துக்கொண்டு "பஸ்" வண்டி வாயிலாக ஊர்காவற்றுறையை அடைந்தேன். அங்கு ஓரன்பர் ஆற்றுப்படுத்தியவாறு, கரம்பன் திருப்பதியை நோக்கி நடந்து சென்றேன்.

ஒரு கூப்பிடு தூரத்துக்கு இப்பாலே கோவில் கண்ணுக்குப் புலப்பட்டது. 'நாளாறிற் கண் இடந்து

அப்பிய' கண்ணப்பராகிய திண்ணனூர் காளத்திமலையில் ஏறுந்தோறும் 'அவருடம்பிலே ஒருவகை உணர்ச்சி தோன்றி இழுத்துச் சென்றது' என்று பேசுகிறது பெரியபுராணம்! காளத்திமலைபோன்ற பத்திவைராக்கிய முடைய கண்ணப்பரைப் பெரிதாக ஈர்த்த கருணை, கடையேனுகிய என்னையும் கடுகளவு கவர்ந்தது எனலாம்.

வயல் நிலமும், தென்னைகளும் அமைந்துள்ள சூழலிலே இக் கோவில் இருக்கின்றது. விரைந்து நடந்து கோவிலை அடைந்து, உள்ளத்தாற் சிறிது வணங்கிய பின் திரு. சபாநாதன் அவர்கள் பிறந்த வீட்டினை நாடினேன். முன்னரே அவர்கள் கூறியவண்ணம் கோயில் வீதி அருகிலே, கிழக்குப்புறமாகக் கோயிற் கேணியருகில் வீடு விளங்கிற்று. அங்கே போனேன். ஒரு மூதாட்டியார் முதலிலே தென்பட்டார். என்னை உபசரித்து "யார் தம்பி?" என்று வினவினுர். தமது அருமை மகனின் அன்பன் என அறிந்ததும் அவரையே நேரிற் கண்டது போன்று அகமகிழ்ந்து முகமலர்ந்தார் அம்மையார்.

பொன்னிறமேனி! தூயவெள்ளை உடை! வெண்ணீறு சண்ணித்த நெற்றி! பல்லிழந்தும் சொல்லிழக்காத பதமான பேச்சு! முதுமைமிக்க 80 வயதிலும் முருகபத்தியிலே திளைக்கும் முகப்பொலிவு!

நான், திருவாதவூரர் புராணம் படித்த காலத்திலே, சிவனையே கூலியாளாக அழைத்த பத்திமைமிக்க உத்தமி செம்மனச்செல்வி என்னும் நரைதிரைக் கிழவியின் கற்பனை உருவம் என் மனத்திரையில் ஒருவாறு பதிந்திருந்தது. அந்த மானசிக உருவம் அன்று என் கண்முன்னே தோன்றித் துலங்கியது. ஆனுல், அந்த மதுரை மூதாட்டியார் மகப் பேறில்லாத வந்தி (மலடி) யானுர். இந்தக் கரம்பன் மூதாட்டியார், கணிப்புடை மக்கட் பேறெய்திக் களிப்பவர்; ஆதலால், "புத்திரப் பேறுறு செம்மனச் செல்வி

எனப் போலியும் உத்தம மூதாட்டி" என்று 11ஆம்பாடலிலே குறிப்பிட்டுள்ளேன்.

கோயிலின் மணியோசை கேட்டது. அந்த வீட்டிலே வசிக்கும் (திரு. சபாநாதனின்) தங்கையார் ஸ்ரீமதி **பெரியதம்பி புவனேஸ்வரி** என்னை நோக்கி "பூசை ஆயத்தம், வணங்கியபின் இங்கு வந்து, போசனஞ் செய்துகொண்டு போங்கள்" என்று புகன்றனர். உடன் பட்டவாறே ஒரு வெள்ளித் தட்டினைப் பெற்று, அதிலே அருச்சனைக்குரிய பண்டங்களை வைத்துக்கொண்டு சென்று ஐயரிடங் கொடுத்தேன்.

**மூலத்தானக் கதவு திறந்தது. 'விண்ணோர் சிறை மீட்ட நான் மண்ணோர் சிறை மீட்பதற்காகக் கரம்பன் பதியிலும் வீற்றிருக்கின்றேன்!' என்று இயம்புவது போலக் காட்சியருளியது வேல். கோயிற் பூசகர் பிரம்மஸ்ரீ கு. சிவராமலிங்க சர்மா அவர்கள் பூசையைத் தமது சொந்த ஆன்மார்த்த பூசைபோல எண்ணிப் பயபத்தியுடன் செய்து பிரசாதங்களை வந்த அன்பர் கட்கு வழங்கினர்.**

நான் உள்வீதிவலம் வந்து வணங்கத்தொடங்கினேன். அப்போது, தென்முக வாசலிலே தமது அருட்சத்திகள் இருமருங்கும் சூழ, ஆறுமுகப்பெருமான் அழகொழுகு காட்சி அளித்தார். முருகனை "கைபுனைந் தியற்றாக் கவின் பெறு மழகன்" என்கின்றது திருமுருகாற்றுப்படை. இந்த ஆறுமுக வடிவமானது, சிற்பியின் கைபுனைந்தியற்றிய தெனினும், அந்த இயற்கை அழகினையும் வென்று மேம் பட்டு நிற்கின்றதெனலாம்.

**விக்கிரகஞ் செய்கின்ற சிற்பியின் கைவண்ணத் தைக் காட்டிலும், அதனைச் செய்விக்கின்ற அன்பரது பத்தி வலிமையே, திருவுருவ அமைவுக்கு முக்கிய காரணமென்பதற்கு, அந்த விக்கிரகம் ஓர் எடுத்துக் காட்டாக இலங்கிற்று!**

காலந்தோறும் சிறிது சிறிதாகச் சேமித்த - தமது சொந்தப் பணத்தைக்கொண்டு ஸ்ரீமதி **குலசேகரம்பிள்ளை இராசம்மா** என்னும் புதுமைகண்ட முதுமைகொண்ட அம்மையார் செய்வித்த எழுந்தருளி மூர்த்தியன்றோ அது.

என் வணக்கம் முடிந்ததும், முன்னர்க் குறித்த பெரிய தம்பியார் இல்லத்திற்கு ஏகினேன். அங்கே அறுசுவை உண்டி என்னைக் காத்துக்கிடந்தது. முதலியார் அவர்களின் தங்கை ஸ்ரீமதி பெரியதம்பி உணவு படைக்க உண்ணத் தொடங்கினேன். இடையிடையே அந்தப் புனிதவதியார், கரம்பன் முருகமூர்த்தியின் அருளிப்பாடுகள் சிலவற்றை இனிக்க இனிக்க எடுத்துக் கூறினர். அஃது, ஆறுசுவையுடன் சேர்ந்து ஏழாவது சுவையாக அமைந்திருந்தது. வயிறுார உண்டபின் சிறிதுநேரம் அப் பெண்மணிகள் இருவருடனும் உரையாடி இளைப்பாறிக் கொண்டு விடைபெற்று அல்வாயூருக்கு மீண்டேன்.

பின்பு, '**கரம்பன் முருகமூர்த்தி தோத்திரக் காரிகை**' (கட்டளைக் கலித்துறை) என்னும் பாக்களையாக்கிப் பூர்த்தி செய்து, கொழும்பு-வெள்ளவத்தை, "முருகன் அருள்" இல்லத்தில் வசிக்கும் சைவப்பெரியார் **குல. சபாநாதன்** அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். அப் பாடல்கள் நூலுருவமாக வெளிவந்திருக்கின்றன.

"மைவருங் கண்டத்தர் மைந்தகந்
தாவென்று வாழ்த்து மிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறியேன்.........
(அருணகிரி)

திருச்சிற்றம்பலம்.

**மு. செல்லையா**
ஆசிரியன்

'பாரதிபவனம்'
அல்வாய்,
25-11-64.

திருமகள் அழுத்தகம், சுன்னுகம் — இ 331-12|65